# செப்டம்பர் - 12- செவ்வாய்
## மரியாவின் பரிசுத்த நாமம்

**கிறிஸ்து இயேசுவை ஆண்டவராக ஏற்றுக்கொண்டீர்கள். அவரோடு இணைந்து வாழுங்கள் (கொலோ 2:6)**

### முதல் வாசகம் : கொலோசேயர் 2 : 6 – 15

சகோதர சகோதரிகளே கிறிஸ்து இயேசுவை ஆண்டவராக ஏற்றுக்கொண்டீர்கள். அவரோடு இணைந்து வாழுங்கள்.அவரில் வேரூன்றியவர்களாகவும் அவர் மீது கட்டி யெழுப்பப்பட்டவர்களாகவும் இருங்கள். நீங்கள் கற்றுக் கொண்ட விசுவாசத்தில் உறுதியாக நில்லுங்கள். நன்ற மிக்கவர்களாய்த் திகழுங்கள்.போலி மெய்யியலாலும் வீணான ஏமாற்றுப் பேச்சாலும் உங்களை யாரும் கவர்ந்துகொள்ள விடாதீர்கள். அவை கிறிஸ்துவை அல்ல, மனித மரபுகளையும் உலகின் பஞ்சபூதங்களையும் சார்ந்தவை. அவற்றைக் குறித்துக் கவனமாயிருங்கள். இறைத் தன்மையின் முழுநிறைவும் உடலுருவில் கிறிஸ்துவுக்குள் குடிகொண்டிருக்கிறது.அவரோடு இணைந்திருப்பதால் நீங்களும் நிறைவு பெறுகிறீர்கள். ஆட்சியாளர், அதிகாரம் கொண்டோர், அனைவரும் அவருடைய கட்டுப்பாட்டுக்குள் உள்ளனர்.நீங்கள் மனிதக் கையால் விருத்தசேதனம் செய்யப்பட்டவர்கள் அல்ல் கிறிஸ்துவோடு இணைந்திருப்பதால் அவர் வழியாய் விருத்தசேதனம் செய்யப்பட்டு ஊனியல்பைக் களைந்துள்ளீர்கள்.நீங்கள் திருமுழுக்குப் பெற்றபோது அவரோடு அடக்கம் செய்யப்பட்டீர்கள். சாவிலிருந்து அவரை உயிர்த்தெழச் செய்த கடவுளின் ஆற்றல்மீது கொண்டுள்ள நம்பிக்கையால் அவரோடு நீங்களும் உயிர்பெற்று எழுந்துள்ளீர்கள்.உடலில் விருத்தசேதனம் செய்து கொள்ளாதவர்களாயும் குற்றங்கள் செய்பவர்களாயும் வாழ்ந்ததால் நீங்கள் இறந்தவர்களாய் இருந்தீர்கள். கடவுள் உங்களை அவரோடு உயிர்பெறச் செய்தார். நம் குற்றங்கள் அனைத்தையும் மன்னித்தருளினார்.நமக்கு எதிரான ஒப்பந்த விதிகள் பல கொண்ட கடன்பத்திரத்தை அவர் அழித்துவிட்டார். அதைச் சிலுவையில் வைத்து ஆணியடித்து அறவே ஒழித்து விட்டார்.தம் சிலுவையினால் கிடைத்த வெற்றியால் ஆட்சியாளர், அதிகாரம் கொண்டோர் ஆகியோரின் படைக்கலன்களைக் கிறிஸ்து பிடுங்கிக்கொண்டு அவர்களை இகழ்ச்சிக்குள்ளாக்குமாறு ஊர்வலமாக இழுத்துச் சென்றார்.

**பதில்பாடல் :** ஆண்டவர் எல்லோருக்கும் நன்மை செய்பவர்

### நற்செய்தி : லூக்கா 6 : 12 – 19

அந்நாள்களில் இயேசு வேண்டுவதற்காக ஒரு மலைக்குப் போனார். அங்குக் கடவுளிடம் வேண்டுதல் செய்வதில் இரவெல்லாம் செலவிட்டார். விடிந்ததும் அவர் தம் சீடர்களைத் தம்மிடம் கூப்பிட்டு அவர்களுள் பன்னிருவரைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்குத் திருத்தூதர் என்று பெயரிட்டார். அவர்கள் முறையே பேதுரு என்று அவர் பெயரிட்ட சீமோன், அவருடைய சகோதரர் அந்திரேயா, யாக்கோபு, யோவான் பிலிப்பு,பர்த்தலமேயு, மத்தேயு, தோமா, அல்பேயுவின் மகன் யாக்கோபு, தீவிரவாதி எனப்பட்ட சீமோன், யாக்கோபின் மகன் யூதா, துரோகியாக மாறிய யூதாசு இஸ்காரியோத்து என்பவர்களே. இயேசு அவர்களுடன் இறங்கி வந்து சமவெளியான ஓரிடத்தில் நின்றார். பெருந்திரளான அவருடைய சீடர்களும் யூதேயா முழுவதிலிருந்தும் எருசலேமிலிருந்தும் தீர், சீதோன் கடற்கரைப் பகுதிகளிலிருந்தும் வந்த பெருந்திரளான மக்களும் அங்கே இருந்தார்கள். அவர் சொல்வதைக் கேட்கவும் தங்கள் பிணிகள் நீங்கி நலமடையவும் அவர்கள் வந்திருந்தார்கள். தீய ஆவிகளால் தொல்லைக்கு உள்ளானவர்கள் குணமானார்கள். அவரிடமிருந்து வல்லமை வெளிப்பட்டு அனைவர் பிணியையும் போக்கியதால், அங்குத் திரண்டிருந்த மக்கள் யாவரும் அவரைத் தொட முயன்றனர்.

**தியானம்:** யேசு தமது பணியைத்தொடர சீடர்களை தெரிவு செய்வதை இன்றைய நற்செய்தியில் நாம் பார்க்கலாம். அவர்களிடம் பலமும் இருந்தது, பலவீனமும் இருந்தது. பணத்திற்கு ஆசைப்பட்டு யேசுவை காட்டிக் கொடுத்த யூதாஸ், மறுதலித்த பேதுரு, சந்தேகம் கொண்ட தோமா ஆகியோர் இதில் அடங்கும். ஆனால் இவர்களில் பேதுரு திருச்சபைக்கு தூணாக மாறினார், தோமா இந்தியா, இலங்கை போன்ற கீழைத்தேய நாடுகளில் இறை அரசை அறிவித்தார். மனமாற்றம் பெற்று மன்னிப்பை பெறமுடியாமல் யூதாஸ் தனது வாழ்வை அழித்தான். தமது இவ்வுலக வாழ்வின் பின்பு தமது பணியைத்தொடர வேண்டிய பொறுப்பை அவர் சீடர்களுக்கு கற்றுத்தர விரும்பினார். ஒரு நாட்டின் தலைவர் இறந்தால் அந்நாடு தலைவர் இல்லாமல் போய் விடுகிறதா? இல்லை, மாறாக இன்னொருவர் அவ்விடத்திற்கு தெரிவு செய்யப் படுகிறார். அவ்வாறுதான் யேசுவும் செய்தார். பன்னிருவர் மட்டும் சீடரல்ல. நாமும் சீடர்களே1 நாம் என்ன செய்கிறோம்? எமது பணி என்ன? ஆலயத்திற்கு செல்வதும் திருப்பலியிலும், திரு விருந்திலும் பங்கு பற்றுவது மட்டும் தானா எமது கிறிஸ்த்தவக் கடமை? இல்லை, மாறாக மற்றவர்களின் தேவையில் உதவுவதும், மன்னிப்பதும், ஒருவரை ஒருவர் அன்பு செய்து வாழ்வதும் எமது கடமைகளே!